வெ.வெ.எண்.798　　　　　　　　　　　　　　　　நாள் : 24.9.2008

## <u>செய்திக் குறிப்பு</u>

வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சித் துறை, மாணவர்களுக்கும், வேலைநாடுநர்களுக்கும் உயர்கல்வி மற்றும் வேலைவாய்ப்பு குறித்த வழிகாட்டுதல் மற்றும் ஆலோசனைகளைப் பல்லாண்டு காலமாக அளித்து வருகிறது. இதனை இன்றைய காலக்கட்டத்தின் தொழில்நுட்ப வளர்ச்சியினை கருத்தில் கொண்டு அதற்கு தக்கவாறு தொழில்நெறி வழிகாட்டுதலை மேற்கொள்ளும் வகையில் அரசு, +2 மாணவர்களுக்கான உயர்கல்வி மற்றும் வேலைவாய்ப்பு குறித்து வழிகாட்டுதலை ஆன்லைன் மூலமாகவும் வீடியோ கான்பரன்சிங் மூலமாகவும் வழங்க ஆணையிட்டுள்ளது.

இதன்படி +2 மாணவர்களுக்கான ஆன்லைன் வாயிலாக உயர்கல்வி மற்றும் வேலைவாய்ப்பு குறித்த வழிகாட்டுதல் நிகழ்ச்சி 11.06.2008 முதல் 13.06.2008 வரை தேசிய தகவல் மையம், ராஜாஜி பவன், பெசன்ட்நகர், சென்னை–90ல் சிறப்புற நடைபெற்றது.

இதனை அடுத்து வீடியோ கான்பரன்சிங் முறையில் மாணவர்களுக்கான தொழில்நெறி வழிகாட்டுதல்கள் குறித்த நிகழ்ச்சி தமிழகத்தில் உள்ள 30 மாவட்டங்களிலும் நாளொன்றுக்கு 6 மாவட்டங்கள் வீதம் தேசிய தகவல் மையம், சென்னை அலுவலகத்துடன் இணைந்து ஐந்து கட்டமாக நடத்தப்படவுள்ளது.

இந்நிகழ்ச்சியினை நடத்த ஏதுவாக வல்லுநர்கள் சென்னையில் உள்ள தேசிய தகவல் மையத்தின் வீடியோ கான்பரன்சிங் அறையினில் அமர்ந்திருப்பர். இம்மையத்துடன் தொடர்பு ஏற்படுத்தப்படும் மாவட்டங்களின் ஆட்சியர் அலுவலகத்தில் அமைந்திருக்கும் வீடியோ கான்பரன்சிங் அறையின் கொள்ளளவிற்கு ஏற்ப +2 மாணவ, மாணவியர் அதில் அமர்ந்திருப்பர். சென்னையில் இருக்கும் வல்லுநர்கள் வேலைவாய்ப்பு மற்றும் உயர்கல்விக்கான கருத்துரைகளை வழங்குவர். இக்கருத்துரைகளின் மீதான சந்தேகங்களுக்கு எழுப்பப்படும் கேள்விகளுக்கும் வீடியோ கான்பரன்சிங் வாயிலாகத் தெளிவுரைகள் வழங்கப்படும்.

முதற்கட்டமாக சென்னை, திருவள்ளூர், காஞ்சிபுரம், திருவண்ணாமலை மற்றும் வேலூர் ஆகிய மாவட்டங்கள் வீடியோ கான்பரன்சிங் வாயிலாக இணைக்கப்பட்டு +2 மாணவ, மாணவியர்க்கான உயர்கல்வி வழிகாட்டுதல் நிகழ்ச்சி வழங்கப்படும். இந்நிகழ்ச்சியினை மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர் அவர்கள் 30.09.2008 அன்றைய தினம் காஞ்சிபுர மாவட்ட ஆட்சியர் அலுவலக வளாகத்தில் உள்ள வீடியோ கான்பரன்சிங் அறையில் துவக்கி வைத்திட உள்ளார்.

சென்னை, திருவள்ளூர், காஞ்சிபுரம், திருவண்ணாமலை மற்றும் வேலூர் ஆகிய மாவட்டங்களில் இந்நிகழ்ச்சி 30.09.2008 அன்றைய தினம் பிற்பகல் 3.00 மணிக்கு நடைபெறும்.

மேற்படி இந்த வீடியோ கான்பரன்சிங் முறையில் வழங்கப்படும் தொழில்முறை வழிகாட்டும் நிகழ்ச்சி நகரத்தில் உள்ள மாணவர்கள் மற்றும் வேலைவாய்ப்பற்றோர்களுக்காக மட்டுமின்றி ஊரக மாணவர்களுக்கும் தகுதியான ஊதியம் பெறும் வேலைவாய்ப்பிற்கு வழிகோலும் படிப்புகளை / வேலைவாய்ப்புகளை தேர்ந்தெடுக்க உதவும் வழிகாட்டுதலாக அமையும் என எதிர்பார்க்கப்படுகின்றது.

**ஆணையர்**

வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத் துறை, சென்னை–9.